

# அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்

**(HOLD FAST TO THE ROPE OF ALLAH)**

**(TAMIL)**

**HAZRAT MUNIR AHMAD AZIM (AS)**

# அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்

## (HOLD FAST TO THE ROPE OF ALLAH)

## (TAMIL)

**FIRST EDITION : October 2017**

**ISSUED BY:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

# CONTENTS

## பொருளடக்கம்


1. JAMAAT-UL-SAHIH-AL-ISLAM : OBJECTIVES
   ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் : நோக்கங்கள்

2. THE FIRST CONDITION/ஒன்றாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)

   AL-'ILM : KNOWLEDGE/ அறிவு

3. THE WAYS TO KNOW THAT THERE IS NO DEITY WORTHY OF WORSHIP EXCEPT ALLAH ARE: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வன்றி வேறெவருமில்லை என்ற உண்மையை உணர்ந்துக் கொள்வதற்கான வழிமுறைகள்

4. THE SECOND CONDITION/ இரண்டாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)
   AL-YAQEEN: CERTAINTY திட நிச்சயம்

5. THE THIRD CONDITION/ மூன்றாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)
   AL-IKLAAS/ SINCERITY/ நேர்மை

6. THE FOURTH CONDITION/ நான்காவது நிபந்தனை (ஒழுங்குமுறை)
   AL-SIDDIQ/ TRUTH FULNESS/ உண்மை

7. THE FIFTH CONDITION ஐந்தாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)
   AL-MUHABBAH/ LOVE/ அன்பு

8. SWEETNESS OF FAITH (IMAAN) நம்பிக்கையின் இனிமை

9. THE SIXTH CONDITION/ ஆறாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)
   AL-INQIAD/ SUBMISSION/ கீழ்படிதல்

10. THE SEVENTH CONDITION/ ஏழாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)
    AL-QUBOOL/ACCEPTANCE/ ஏற்றுக் கொள்ளுதல்

بسم الله الرحمن الرحيم

**“அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்”**

# TRANSLATOR'S NOTE

## மொழியாக்கவுரை

**“உங்களில் எவர் ஈமான் கொண்டு நற்செயல்கள் புரிகின்றார்களோ அவர்களை அவர்களுக்கு முன்னிருந்தோரைப் பூமிக்கு கலீஃபாக்களாக்கியது போல் உங்களையும் இப்பூமியில் கலீஃபாக்களாக்கி வைப்பதாகவும் இன்னும் அவன் அவர்களுக்காக பொருந்திக் கொண்ட மார்க்கத்தில் அவர்களை நிச்சயமாக நிலைப்படுத்துவதாகவும் அவர்களுடைய அச்சத்தைத் திட்டமாக அமைதியைக் கொண்டு மாற்றி விடுவதாகவும் அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்.....”** (24: 56)

மேல்கூறிய திருமறை வசனம் எல்லாம் வல்ல அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு அளித்திருக்கும் வாக்குறுதியாகும். அந்த இறை வாக்குறுதிக்கு, அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அளித்த ஒரு விளக்கம் கீழ்வருமாறாகும்.

**“ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் இஸ்லாமத சீரமைப்புக்காக ஒவ்வொரு சீர்திருத்தாளர்களை அல்லாஹ் தோற்றுவிப்பான்”** (அபூதாவூத்)

மேல் சுட்டிக்காட்டிய திருமறை வசனத்தினுடையவும் திருநபி மொழியுடையவும் விடியலாக ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் ஒவ்வொரு சீர்திருத்தாளர்கள் இஸ்லாமில் வருகை தந்தனர். அந்த வரிசையில் இந்நூற்றாண்டின் தலைப்பிலும் இஸ்லாமத சீரமைப்புக்காக இறைவனால் தோற்றுவித்த இறைத்தூதராவார் “ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அலை) அவர்கள்.

உலக மக்களின் சீர் திருத்தம் எனும் மாபெரும் இறைபணியாற்ற இந்நூற்றாண்டில் வருகை தந்திருக்கும் “ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அலை) அவர்கள் எழுதிய **“HOLD FAST TO THE ROPE OF ALLAH”** என்னும் ஆங்கில நூலின் தமிழாக்கமாகும் **“அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக**

**பற்றிப்பிடித்திடுங்கள்"** என்னும் இந்நூல். ஏற்கனவே இந்த நூலை மலையாள மொழியில் வெளியிட்டிருந்தோம். **மதிப்பிற்கும் மரியாதைக்கும் கண்ணியத்திற்குமுரிய திரு ஜமாலுத்தீன் சாஹிப் (தென்மண்டல அமீர்)** அவர்கள் மொழி பெயர்த்த அந்த நூல் கேரள முஸ்லீம் மக்களிடமிருந்து மாபெரும் வரவேற்பை பெற்றிருந்தது. தற்பொழுது அந்நூலை தமிழில் மொழிபெயர்த்து தமிழ் மக்கள் முன் சமர்பித்துக் கொள்ள முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைவதோடு அதற்கான பாக்கியத்தை அளித்த என் இறைவனுக்கு மேலும் மேலும் நான் நன்றியினை செலுத்துகின்றேன். அத்தோடு இந்நூலை வெளியிடுவதற்கு எல்லா வகையிலும் உதவி புரிந்த ஜமா-அத் உறுப்பினரும் என் சகோதரனுமாகிய அன்புக்குரிய **ஜனாப் முஹம்மது சாபிர் சாஹிபை** இத்தருணத்தில் நினைவு கூறுகின்றேன்

இந்நூற்றாண்டில் (ஹிஜ்ரா 15-ம் நூற்றாண்டின் தலைப்பில்) இஸ்லாமத சீரமைப்புக்காக அல்லாஹ் என்னை **முஜத்தீதாகவும், முஹைத்தீனாகவும், கலீ·.பத்துல்லாவாகவும், நபியாகவும், ரசூலாகவும்** நியமித்திருக்கின்றான் என்று கடந்த 18 வருடகாலமாக இறைவனிடமிருந்து பெற்றுவருகின்ற இறை வெளிப்பாடுகளை எடுத்துரைத்து வாதம் செய்து வரும் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம்(அலை) அவர்களின் இந்த நூலிடம் தொடர்பை வைத்துக்கொள்ளும் எவர் ஒருவரையும் அது தங்களின் இறைவனின் பால் எட்ட வைத்துக் கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. உண்மையைத் தேடும் நடுநிலை உள்ளம் கொண்ட மக்களுக்கு இந்த நூல் நல்வழிகாட்டிக் கொள்ளட்டும் என மனமாற தூவாவில் மூழ்கிக் கொண்டு இந்நூலை தமிழ் மக்களுக்குமுன் சமர்ப்பிக்கின்றேன்.






**E-mail:** azimahmad070@gmail.com

# PREFACE

## முன்னுரை

இத்தகையிலான ஒரு நூலை உங்களின் கரங்களில் எட்ட வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இறையருட்களால் இது இஸ்லாமின் உண்மையான போதனைகளின் பாலான ஒரு வழிகாட்டியாகும். எல்லா இறைத்தூதர்களின் தோற்றமும் இதற்காகவேயாகும். இஸ்லாமைக் குறித்த அறிவு மனிதனை தூண்டிக் கொள்கின்றது. குறிப்பாக ஒரு நம்பிக்கையாளர் பூமியில் தம் இலட்சியம் என்ன என்பதை மிக நன்கு உணர்ந்துக் கொள்கின்றார்.

நம் இஸ்லாமை மிக நன்றாக உணர்ந்துக் கொள்வதற்கு அல்லாஹ் நமக்கு உதவிபுரிவானாக! அதைப் போன்றே ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை-அதன் உறுதிமொழியையும் போதனைகளையும் பூர்த்தி செய்வதற்கும் அல்லாஹ் நமக்கு உதவி புரிவானாக. இறைவா! இந்த பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக! ஆமீன்

முனீர் அஹ்மது அஸீம்

(ஹஸ்ரத் கலீ∴.பத்துல்லாஹ்)

(ஜமா அத்து சஹீஹில் இஸ்லாம்)

27 ஜமாதுல் ஆகிர் 1430 ஹிஜ்ரா



HAZRAT MUNIR AHMAD AZIM (AS)

# JAMAAT UL SAHIH AL ISLAM'S OBJECTIVES

## ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாம்: நோக்கங்கள்

"நீங்கள் ஈமான் கொள்வதைப் போல் அவர்களும் ஈமான் கொண்டால் நிச்சயமாக அவர்கள் நேர் வழியை பெற்று விடுவார்கள்" (2 : 138)

1. **முஸ்லீம் தம் வாழ்க்கையுமாக தொடர்புடைய அனைத்து வகைப்பட்ட விஷயங்களையும் தூய்மைப்படுத்திட வேண்டும்.**

   உள்படையும் வெளிப்படையுமான அனைத்து வித உருவ வணக்கங்களிலிருந்தும் (சீர்க்கு) தம் நம்பிக்கையை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அடிப்படையற்ற கைகடத்தல்களுக்கு (பித்-அத்) எதிராக மக்களுக்கு கவனமூட்டிக் கொள்ள வேண்டும். மத நடைமுறைகளிலும் தொழுகை முறைகளிலும் நுழைந்துவிட்ட தவறான வழக்கங்களுக்கு முடிவுகட்டிக் கொள்ள வேண்டும். இஸ்லாமின் தூய இயல்பை கறைப்படுத்திக் கொள்வதும் முஸ்லீம்களின் முன்னேற்றத்திற்கு தடை ஏற்படுத்திக் கொள்வதுமான ஊனமுற்ற கருத்துகளை அழித்துக் கொள்ள வேண்டும். எல்லையினை அத்துமீறுகின்றோர்களை தூய தூதரின் வசனங்களின் அடிப்படையில் பகுத்தறிவதற்கும் பொய்மையானவர்களின் தவறான விளக்கங்களிலிருந்து மத போதனைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும் மக்களை ஆயத்தமாக்கிக் கொள்ளவேண்டும் போன்றவை அவையில் உட்படுகின்றது.

2. **முஸ்லீம்களின் மத கல்வியும் சீரமைப்பும்**

   உண்மையான மதவிஞ்ஞானம் முஸ்லீம்களை கற்பித்துக் கொள்ள வேண்டும். இஸ்லாமத கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு செயல்பட்டுக் கொள்வதற்கு அவர்களை ஊக்குவிப்பதோடு திடம் வாய்ந்த நல்லொழுக்கமும் நற்இயல்பும் அவர்களில் வளரச்செய்ய வேண்டும். அழிவிலிருந்து இரட்சிப்பை பெற்றவர்களைக் குறித்து திருக்குர் –ஆன் விவரிப்பதைப் போன்று, அல்லாஹ்வின் பரிபூரணமான திருப்திக்கும் அருள்களுக்கும் ஆளாகி அவர்கள் உன்னதமான இடத்தை அடைவதற்கான சூழ்நிலையினை உருவாக்கி கொள்ளவேண்டும்.

"ஒரு மனிதருக்கு அல்லாஹ் வேதத்தையும் ஞானத்தையும் நபிப்பட்டத்தையும் கொடுக்க பின்னர் அவர் அல்லாஹ்வை விட்டு எனக்கு அடியார்களாகி விடுங்கள் என்று மனிதர்களிடம் கூற இயலாது. ஆனால் அவர் மக்களிடம் "நீங்கள் வேதத்தைக் கற்றுக் கொண்டும், கற்றுக் கொடுத்துக் கொண்டும் இருப்பதனால் நீங்கள் இறைவனை வணங்கி அவனையே சார்ந்திருப்போர்களாகி விடுங்கள்" (என்று தான் சொல்லுவார்) (3 : 80)

## 3. உண்மையான இஸ்லாமிக சிந்தனைகளுக்கு உயிர்கொடுங்கள்

திருக்குர் ஆனுடையவும் திரு சுன்னத்தினுடையவும் சமுதாயத்தை சார்ந்த சலபுசாலிஹீங்களுடையவும் ஒளி நிறைந்த பாதையின் அடிப்படையில் இஸ்லாமிக சிந்தனையை பிரகாசிக்கச் செய்யவேண்டும்.

“மத்ஹபுகளை மூடத்தனமாக பின்பற்றுதல் வாயிலாக நிகழ்ந்த பலனற்ற வழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு சகோதரபந்தங்களையும் மன ஒற்றுமையையும் அழித்துக் கொள்ளும் தேவையற்ற கட்சிவேறுபாடுகளுக்கு முடிவு கட்டிக் கொள்ளவும்வேண்டும். போன்றவைகள்

புகழ்மிக்கவனும் மகத்துவமுடையவனுமான அல்லாஹ் கூறுகின்றான்

**“நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்”** (3 : 104)

**“அல்லாஹ்வை வணங்குவோர்கள் சகோதரர்களாகயிருங்கள்”** (நபிமொழி)

## 4. காலகட்டத்திற்கேற்ப நிகழும் விஷயங்களுக்கு இஸ்லாமிக செயல்முறைகளில் பரிகாரங்கள் வழங்கிக் கொள்ள வேண்டும்.

தூதுவ அரசன் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் கற்பித்த இஸ்லாமிக வாழ்க்கைமுறைகளுக்கு உயிர் வழங்கி கொள்ளவேண்டும். தூய ஆவியால் கையாளும் ஒரு சமூகத்தை தோற்றுவித்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை பூமியில் நடைமுறைப்படுத்திட முயர்ச்சித்துக் கொள்ள வேண்டும். தவறுகளை சரிச்செய்யும் வழிமுறைகள், ஞானம் சம்பாதித்துக் கொள்ளுதல், அறிவுரை பெற்றுக்கொள்தல்(Tarbiyyat) போன்றவையினை பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்.

**“அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து அவர்களைத் தூய்மைப்படுத்தவும் செய்வாயாக”** (2 : 129)

## 5. வல்லமை வாய்ந்த இஸ்லாமிக வழியின் பால் மக்களுக்கு அழைப்பு விடுங்கள்.

தம் படைப்பினங்களுக்காக அல்லாஹ் தோற்றுவித்த முற்றிலும் முழுமைவாய்ந்த நற்செய்தியாகும் இஸ்லாம். மறுமையில் நிரந்தரமான இன்பமும், வாழ்க்கையில் திருப்தியும், சாந்தியும் பெற்றுக் கொள்வதற்காக இஸ்லாமிக மார்க்கதீபத்தை குறித்து உண்மையான ஞானம் கிடைக்காத மக்களுக்கு அன்புடன் அழைப்பு விடுக்க வேண்டும்.

எங்கள் வேலையும், செயலும் இதுவேயாகும். இந்த சுமையான கடமையை நிறைவேற்றிக் கொள்வதற்காக எங்களுக்கு (ஜமா அத்துசஹீஹில் இஸ்லாம்) உதவிபுரிய அனைத்து முஸ்லீம்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். இந்த கடமைகளை ஏற்றெடுத்துக் கொள்வதன் வாயிலாக மக்களை உணரச்

செய்வதற்கும், உயரச் செய்வதற்கும், இஸ்லாமின் நிரந்தரமான நற்செய்தியை உலகின் அனைத்து பகுதிகளிலும் எட்டவைப்பதற்கும் நமக்கு முடிந்துவிடும். உண்மையான சகோதரத்துவத்தின் மீதும் நேர்மையான பண்பின் மீதும் அல்லாஹ்வின் உதவியிருக்கும் என்று முழுமையாக நம்பிக்கை வைத்துக் கொண்டும் அத்தோடு அவனுடைய தூய அடியார்களுக்கு, இக்கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான சூழ்நிலைகளை அவன் உருவாக்கி கொள்வான் என்று எண்ணிக் கொண்டும் நமக்கு முன் செல்வோம்.

**“கண்ணியம் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மு.்.மீன்களுக்குமே உரியது”** (63 : 9)

**“அவனே தன் தூதரை நேர்வழியுடனும் சத்திய மார்க்கத்துடனும் அனுப்பினான்”** (61 : 10)

# INTRODUCTION

## அறிமுகம்

அகில உலகையும் கட்டிக் காக்கும் அல்லாஹ்வுக்கே அனைத்து புகழும். நல்லவர்களுக்கு இறுதியில் மிக நல்லதே கிடைத்துவிடும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வேயன்றி மற்றெவருமில்லை என நான் உறுதி மொழிகின்றேன். அவன் ஏகனாவான். அவனுக்கு எவ்வித பங்காளிகளுமில்லை. ஆகாய – பூமியுடைய நாதனும் அவனே ஆவான். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அவனது அடியான் என நான் உறுதி மொழிகின்றேன். அல்லாஹ்வே தேர்வு செய்த நேர்மையான இறைத்தூதர். அன்னாரின் குடும்பத்தாருடையவும் தோழர்களுடையவும் மீதும் அல்லாஹ் சாந்தி பொழிவானாக.

மகத்துவமுடையவனாகிய அல்லாஹ்வின் உதவியால் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வேயன்றி வேறெவருமில்லை என்பதற்கு போதுமான சாற்றுகள் நான் அளிக்கின்றேன். அதை விவரித்துக் கொள்வதற்காக அவன் எனக்கு வழங்கிக் கொண்ட அருள்களைக் குறித்து சுருக்கமாக நான் உங்களுக்கு தெரியப்படுத்திக் கொள்வேன். ஏகனாகிய அல்லாஹ்விடமிருந்து கிடைத்த ஒளியால், நேர்மார்க்கத்தின் பாலும் உண்மையின் பாலும் அழைப்பு விடுக்கும் நம் சகோதரி-சகோதரர்கள் மீது அல்லாஹ் அருள்கொடைகளை பொழிவானாக! அவர்களை பாதுகாத்துக் கொள்வானாக! ஆமீன்.

நேர்வழியும் நன்மையும் தேடிச்செல்லும் இஸ்லாமிக இளைஞர்கள் இஸ்லாமிக பண்டிதர்களின் புத்தகங்களை தேடிச் செல்வது மிக விருப்பத்துடனேயாகும். அவர்கள் சீரமைப்பும் முன்னேற்றமும் நாடிக் கொள்வோர்களாகயிருக்கின்றனர். அவர்கள் அதிலிருந்துப் பெற்றுக் கொள்ளும் பிஹ்கினுடையவும் சுன்னத்தினுடையவும் அடிப்படையில் தங்களின் பிள்ளைகளை வளர்ப்பதற்கு முயற்ச்சிக்கின்றனர். ஆனால் நிகழ்கால சிந்தனைகளைப்பற்றி எடுத்துரைக்கும் சில நூல்களின் பளபளப்பின் பால் இளைஞர்கள் சென்றுவிடாமலிருப்பதற்கு கவனம் வைத்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமாகயிருக்கும் ஒரு காலகட்டம் வழியாகவே நாம் பயணம் மேற்கொள்ளுகின்றோம். காரணம் அந்நூல்களில் பெரும்பான்மையும் இஸ்லாமிக உண்மையிலிருந்தும் அதன் கிளைகளிலிருந்தும் இஸ்லாமின் நிஜமான போதனைகளிலிருந்தும் விலகி நிற்பதும் மனிதனை வழிதவறச் செய்வதும் ஆகும்.

**முஹைத்தீன் (தீனுக்கு உயிர் அளிப்பவன்) என்ற நிலையிலும் கலீஃ.பத்துல்லாஹ் (அல்லாஹ்வின் கலீஃ.பா) என்ற நிலையிலும் "லா இலாஹா இல்லல்லாஹ்" என்பதற்கு மிக சிறந்த சான்றுகளை நான் சமர்ப்பித்திருக்கின்றேன்.** எனது வேலை, "லாஇலாஹா இல்லல்லாஹ்" என்ற சொல்லின் உண்மையான பொருளினை மக்களிடத்தில் எட்டவைப்பதும் அதன்படி

எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதை உங்களை தெரியப்படுத்திக் கொள்வதுமாகும்.

எவராவது இஸ்லாமைக் குறித்து வாதம் எழுப்பவும் அவ்வாதத்திற்கான அடிப்படை திருக்குர்-ஆனில் இல்லாமலிருக்கவும் செய்தால் அவரது அச்சிந்தனை உண்மையிலிருந்து மிக தொலைவிலாகயிருப்பதும், அவர் தூக்கி வீசும் விஷ நீரைப்போன்று அது திருமறையின் பாடங்களிலிருந்து விலகி நிற்பதும், பொதுவாக இந்த உம்மத்தை குறிப்பாக இளைஞர்களை நேர்பாதையிலிருந்து வழிதவறச் செய்வதும், தீனில் இடம்பெறாத விஷயங்களை (பித் அத்) தத்தெடுத்துக் கொள்வதும் ஆகும்.

இறைப்பாடங்களை வழங்கிக் கொள்பவர் வார்த்தையாலும் செயல்களாலும் புத்தியாலும் தனது ஆன்மாவை ஆளுகின்றான். ஆனால் வார்த்தையாலும் செயல்களாலும் நவீன கருத்தை (பித் அத்) பின்பற்றுகின்றவர் மனக்குழப்பத்தின் பாதையிலேயே பயணம் மேற்கொள்ளுகின்றார்.

**அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப்பிடித்துக் கொள்வதற்கான நிபந்தனை என்ற வகையில் ஏழு விஷயங்களை உங்களின் முன்னர் சமர்பித்துக் கொள்கின்றேன். இதை நீங்கள் மிக நன்றாக படித்து புரிந்துக்கொண்டு அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப்பிடித்துக் கொள்வீர்கள் என்ற திட நம்பிக்கையுடன் இந்த முன்னுரையினை நிறைவு செய்கின்றேன்.**

**முனீர் அஹ்மது அஸீம்**

**ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ்**

# THE FIRST CONDITION

## ஒன்றாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)

## AL-ILM / KNOWLEDGE/ அறிவு

அறிவு என்பதால் பொருளாக்கப்படுவது, மறுத்துக் கொள்தலும், ஏற்றுக்கொள்தலுமாகும். அல்லது உறுதிமொழி கூறிக்கொள்தலுமாகும். அறிவின் ஆசனம் என்பது இறை வசனங்களாகும். **“லா இலாஹா இல்லல்லாஹ்”** அதாவது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வின்றி வேறொருவருமில்லை என்ற பரமார்த்தத்தை முஹம்மது நபி(ஸல்) அவர்களும் அன்னாரின் உண்மைக்கு சாட்சி அளித்தோர்களும் நன்கு உணர்ந்து கொள்பவையாகும். அதாவது **“லா இலாஹா இல்லல்லாஹ்”** என்பது உண்மையென.

ஹஸ்ரத் உஸ்மான்(ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்ததாக சஹீஹில் முஸ்லீமில் வந்துள்ள ஒரு நபி மொழியில் இவ்வாறு காணலாம்

**“வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வின்றி வேறொருவருமில்லை என்பதை உணர்ந்துக் கொண்டு மரணிக்கின்றவர் சொர்க்கத்தின் பால் நுழைந்துவிட்டார்”**

எனது நோக்கத்தின் அடிப்படையில் கூறினால், அறிவு என்பதால் அர்த்தமாக்கி கொள்வது, மறுத்துக்கூறுதலும் தொடர்ந்து திடம் வாய்ந்த உறுதிமொழி கூறிக்கொள்தலும் (ஏற்றுக்கொள்தலும்) ஆகும். ஆரம்பத்தில் இதை நான் சுட்டிக்காட்டியிருந்தேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வையன்றி மற்றெதையும் வணங்கமாட்டேன். இதன் முதல் பகுதியில் **“லா இலாஹா”** என்று மறுத்துக் கூறுதலும் தொடர்ந்து இரண்டாம் பகுதியில் அல்லாஹ் மட்டுமே ஆவான் என உறுதியுடன் கூறிக்கொள்தலும் ஆகும். அனைத்து புகழும் மகத்துவமும் அவனுக்குரியதாகும். அல்லாஹ் என்ற நிலையில் அவன் நேர்மையானவன். சிறந்தவன் இராஜவல்லமையுடையவன். அவனது கோட்டையிலும் படைப்பிலும் திட்டத்திலும் எந்த பங்காளிகளுமில்லை. நம்மிடம் அவனை வணங்குவதற்காக கூறிக்கொள்ளும் போதும் அவனுக்கு பங்காளிகளில்லை. அக்காரணத்தால் தான் அவன் **நபிமார்களையும், ரசூல் மார்களையும், முஜத்தீதுகளையும், கலீ∴பத்துல்லாக்களையும்** தோற்றுவிப்பதும் அவர்களனைத்தும் **“அவன் மட்டுமே வணக்கத்திற்குரியவன்”** என்ற கருத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்டிருப்பதும். இராஜராஜாதி இராஜனாகிய அல்லாஹ் கூறுகின்றான். என்னை தவிர வணக்கத்திற்குரியவன் வேறெவருமில்லை. ஆகவே **“உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் என்னைத் தவிர வேறெவருமில்லை எனவே என்னையே நீங்கள் வணங்குங்கள் என்று நாம் வஹி அறிவிக்காமலில்லை”** (21: 25)

நூஹ்(அலை)மும் ஹூத்(அலை)மும் சாலிஹ் (அலை) மும் என்று மட்டுமின்றி அவர்கள் ஒவ்வொருவரும் கூறினார்கள் **“என் கூட்டத்தாரே அல்லாஹ்வையே வணங்குங்கள் உங்களுக்கு அவனன்றி வேறு இறைவனில்லை. நிச்சயமாக நான் உங்களுக்கு வர இருக்கும் மகத்தான ஒரு நாளின் வேதனைப்பற்றி அஞ்சுகின்றேன் என்று கூறினார்”.** (7: 60)

சாலிஹ்(அலை) அவர்கள் கூறினார்.

என் சமூகத்தார்களே! அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனன்றி உங்களுக்கு வேறு நாயகனில்லை. (7: 74)

ஹூத் (அலை) அவர்கள் கூறினார்

**“என்னுடைய சமூகத்தாரே! அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள். அவனன்றி வேறு இறைவன் உங்களுக்கு இல்லை. நீங்கள் பொய்யர்களாகவே தவிர வேறில்லை. என் சமூகத்தார்களே! இதற்காக நான் உங்களிடம் ஒரு கூலியும் கேட்கவில்லை. எனக்குரிய கூலி எல்லாம், என்னைப்படைத்த அல்லாஹ்விடமே இருக்கின்றது. நீங்கள் இதை உணரமாட்டீர்களா?** (11: 51, 52)

மகத்துவமுடையவனாகிய அல்லாஹ் நம்மிடம் கூறுகின்றான் அனைத்து இறை தீர்க்கதரிசிகளும் தூதர்களும் அழைப்புவிடுத்தது ஒன்றேயாகும். **“அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள். ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச்செல்லுங்கள் என்று போதிக்குமாறு நாம் தூதர்களை அனுப்பி வைத்தோம்”** (16: 37)

மிக உன்னதனாகிய அல்லாஹ் அவனது தூதராகிய முஹம்மது(ஸல்) விடம் தம் சமூகத்தாரிடம் கூறிக்கொள்ள கட்டளையிட்டதாவது **“அவனையன்றி வேறு எவரையும் நீர் வணங்கலாகாது என்று” இறைவன் விதித்திருக்கின்றான்”.** (17: 24)

வேறொரு வசனத்தில் கூறுகின்றான் **“அல்லாஹ்வையே மட்டும் வணங்குவதற்கு எனக்கு கட்டளை கிடைத்திருக்கின்றது. அவனுக்கு இணைவைக்காமல் இருப்பதற்கும்.”**

மேல் சுட்டிக்காட்டிய திருக்குர்-ஆன் வசனங்களிலிருந்தும் அதைப் போன்றே அதே அர்த்தம் கிடைக்கும் மற்று பல வசனங்களிலிருந்தும் மிக தெளிவாகவும் சந்தேகமின்றியும் நமக்கு வழங்கப்பட்டிருக்கும் பாடம் என்பது, அனைத்து தீர்க்க தரிசிகளையும் தூதர்களையும், அவர்களின் சமூகத்தாரிடம் அல்லாஹ் அனுப்பி வைத்தது **“லா இலாஹா இல்லல்லாஹ்” வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வன்றி வேறு எவருமில்லை** என்ற தூது செய்தியுடனாகும்.

அறிந்துக் கொள்ள முன்வருவதன் அர்த்தம் அறிந்துக் கொள்தலாகும். அறிவு, அதற்கு இதயம் சாக்சியமளிக்கவேண்டும். அறிவின் முழுமை என்பது அறிவுக்கு ஏற்றவாறு செயல்பட்டுக் கொள்தலாகும். அல்லாஹ் கற்பித்த அறிவு அதாவது அல்லாஹ் ஏகன் என்ற அறிவு, ஒவ்வொரு மனிதனும் பெற்றுக்கொள்ள வேண்டிய அவர்களின் தனிப்பட்ட முறையிலான கடமையாகும். அதிலிருந்து எவர் ஒருவரையும் விலக்கி வைத்துக் கொள்ளவில்லை.

## THE WAYS TO KNOW THAT THERE IS NO DEITY WORTHY OF WORSHIP EXCEPT ALLAH ARE:

**வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வன்றி வேறொருவருமில்லை என்ற உண்மையை உணர்ந்துக் கொள்வதற்கான வழிகள்**

1. இறைவனின் நாமங்களைக் குறித்தும் அவனது தன்மைகளைப் பற்றியும் அவனது செயல்களைக் குறித்தும் சிந்திக்க வேண்டும். அது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது வாயிலாக இறைவனின் பூரணமான நிலை, அவனது மகத்துவம், அவனது மதிப்பு போன்றவையை தரிசித்துக் கொள்ள முடிந்துவிடும். இறைவனின் அத்தன்மைகள்யாவும் எவர் ஒருவரையும் இறைவனுக்கு கடன்பட்டவராக மாற்றிக்கொள்ளவும் இறைவனுக்காக அனைத்தையும் சமர்பித்துக் கொள்ளவும், அவனை வணங்கிக் கொள்ளவும் ஆயத்தமாக்கின்றது. அத்தோடு அனைத்து துதிகளும் புகழ்களும் மகத்துவங்களும் பேருதவிகளும் அவனுக்கு மட்டுமுரியதென அவர் உணர்ந்துக் கொள்கின்றார்.
2. முற்றிலும் மகத்துவமுடையவனாகிய இறைவன் மட்டுமே உண்மையில் அறிவு. அறிவை படைத்துக் கொள்வதும் அதை திட்டப்படுத்திக் கொள்வதும் அவனே ஆவான். அதை தொடர்ந்து நாம் பெற்றுக் கொள்ளும் அறிவு என்பது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வன்றி வேறெவருமில்லை என்பதாகும்.
3. மறைவானதும் வெளிப்படையானதும், அனைத்து வகைப்பட்ட பௌதீகமும் ஆன்மீகமுமான பரிசுகள்யாவும் வழங்கிக் கொள்பவன் இறைவன் மட்டும் ஆவான். இந்த அறிவை உணர்ந்துக் கொள்பவரின் இதயத்தில் அவனுடன் ஒரு தனிப்பட்ட முறையிலான பந்தம் உருவாகிக் கொள்கின்றது. அதாவது அவன் மீதான ஒரு அன்பு, அவன் மீதான ஒரு சமர்ப்பணம் எந்த பங்காளிகளுமில்லாத அவனுக்கு மட்டும் கீழ்பணிதல் போன்றவை உருவாகி கொள்கின்றது.
4. அல்லாஹ்வின் ஏகத்துவத்தை பகுத்தறிந்து செயல்படுகின்றோர்களுக்கு அவன் வழங்கிக் கொள்ளும் பாதுகாப்பைக் குறித்து நாம் கண்டுக் கொள்ளவும் கேட்டுக் கொள்ளவும் செய்கின்றோம். அத்தகையாளர்களின் வாழ்க்கையில் ஏராளமான வெற்றிகளும் அருள்களும் இவ்வுலகிலேயே கிடைத்துக் கொள்ளுவதாகவும், அதே நேரத்தில் அல்லாஹ்விற்கு இணை வைப்போர்களை அவன் தம் பகைவர்களாக கண்டு அவர்களுக்கு

போதுமான தண்டனைகளை அளித்துக்கொள்ளுவதாகவும் நாம் காண்கின்றோம், கேட்கின்றோம். இந்த பகுத்தறிவு நம்மை கொண்டு செல்வது புகழ் நிறைந்த அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்குரியவன் என்ற பரம உண்மையின் பாலாகும்.

5. அல்லாஹ்வுக்கு பங்காளிகளாக நாம் எண்ணிக் கொள்ளும் தெய்வங்களுக்கு அல்லது சிலைகளுக்கு உண்டு என்று நாம் நினைத்துக் கொள்ளும் தன்மைகளைக் குறித்த பகுத்தறிவாகும். அவர்கள் (இறைபங்காளிகள்) எல்லா நிலையிலும் முழுமையடையாதவர்கள் என்றும் அவர்களும் அவர்களை வணங்குவோர்களும் அடைக்கலமற்றவர்கள் என்றும் அவர்களுக்கு வாழவைப்பதற்கோ மரணிக்க செய்வதற்கோ எழுப்பிக் கொள்வதற்கோ ஆன எந்த ஆற்றலும் இல்லை என்றும் நாம் பகுத்தறிய வேண்டும். அவர்களுக்கு, அவர்களிடத்தில் (உருவம்) மன்றாடிக் கொள்வோர்களுக்கு மிக சிறிய அளவிற்குக்கூட உதவி புரிவதற்கோ தீய சக்திகளின் கவர்ச்சி வட்டாரத்திலிருந்து அவர்களை பாதுகாத்துக் கொள்வதற்கோ ஆன எவ்வித ஆற்றலுமில்லை. இந்த பகுத்தறிவு நம்மை கொண்டு செல்வது அல்லாஹ்வல்லாமல் வணக்கத்திற்குரியவன் மற்றெவருமில்லை என்றும், எஞ்சுகின்றவை அனைத்தும் பொய் தெய்வங்கள் என்றும் ஆன உண்மையின் பாலாகும்.
6. நாம் உணர வேண்டிய உண்மை என்பது அல்லாஹ்வின் பரிசுத்த நூல் (திருக்குர்-ஆன்) இவ்விஷயத்தை சரிவைத்துக் கொள்கின்றது என்றும் இக்கூறிய உண்மைகள்யாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்றும் ஆகும்.
7. மானிட சமூகத்தில் தீர்க்கதரிசிகளாகவும் தூதர்களாகவும் தேர்வு செய்யப்பட்ட அனைவர்களும் பருமாற்றத்திலும், சிந்தனைகளிலும், தீர்ப்பு கூறும் விஷயத்திலும் அறிவிலும் பகுத்தறிவிலும் முழுமை பெற்றவர்களாக இருந்தனர்.
8. மனித குலத்தில் குறிப்பாகவும் பிரபஞ்சம் முழுவதாகவும் வெளிப்பட்டுக் கொள்ளும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் அடையாளங்களை பகுத்தறிய வேண்டும் என்பது எட்டாவது வழியாகும். அது மிக சுலபமாக உணரயியலும் விஷயமாகும். அதாவது இந்த பிரபஞ்சத்தை முழுவதும் குறிப்பாகவும் மனித குலம் அனைத்தையும் அவன் படைத்திருக்கின்றான். அவனின் அப்படைப்பினங்கள் யாவும் பரிபூரணமான அழகுடன் இங்கு இயங்கிவருகின்றது. அது, அர்ப்புதப்படுத்துமளவிற்கான அல்லாஹ்வின் படைப்புத் தன்மைகளையும் எவ்வித முன்மாதிரியுமின்றி பல்வகையான படைப்பினங்களை வடிவமைத்துக் கொள்ளும் அவனது மாபெரும் ஆற்றல்களையும் நமக்கு சுட்டிக் காட்டுகின்றது.

இதைப் போன்று பல்வகையான விஷயங்களை நமக்கு முன் அவன் வெளிப்படுத்திக் காட்டியிருப்பது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வன்றி மற்றெவருமில்லை என்ற உண்மையை உணர்ந்துக் கொள்வதற்கும், இந்த பரம உண்மையை திருக்குர்-ஆன் வழி மேலும் மேலும்

வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை புரிந்துக் கொள்வதற்கும் ஆகும். இறைவனிடத்தில் மன்றாடிக் கொள்ளும் (இறைத் தியானத்தில் மூழ்கிக் கொள்ளும்) எந்த ஓர் அடியாரும் இந்த பரமார்த்தத்தை பகுத்தறிந்திடவே செய்வார்.

அல்லாஹ்வின் ஏகத்துவத்தை எடுத்துரைக்கும், மேல் சுட்டிக் காட்டிய ஒன்றுக்கொன்று முரண்பாடில்லாத இத்தகை அடையாளங்கள் ஒரு நம்பிக்கையாளரின் ஈமானை பலபடுத்திக் கொள்ளவும், பூமியில் மலைகள் உறைந்திருப்பது போன்று அவரது இதயத்தில் நம்பிக்கை உறைய வைக்கவும் செய்கின்றது.

இத்தகையான நம்பிக்கை சந்தேகங்களுக்கோ மன சஞ்சலங்களுக்கோ கீழ்ப்படிந்துக் கொள்வதில்லை. மட்டுமின்றி பொய்மையும் சந்தேகங்களும் மேலும் மேலும் எழும்பிக் கொண்டால் கூட ஈமான் அசையாமல் பரிபூரணமான நிலையை அடைந்துவிடவும் செய்கின்றது.

## THE SECOND CONDITION

## இரண்டாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)

## AL-YAQEEN/ CERTAINTY/ திட நிச்சயம்

### நிச்சயம் தவறாத தன்மை

திடநிச்சயம் என்றால் பரிபூரணமான ஞானமாகும். அதை பலனற்றவையாக பரிணமிக்க செய்வது சந்தேகமும் மன சஞ்சலித்தலுமாகும். நிச்சயம் தவறாத தன்மையைக்குறித்து எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்.

**“அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் நம்பிக்கை கொண்டு பின்னர் (அதை பற்றி எத்தகைய) சந்தேகமும் கொள்ளாது தம் செல்வங்களைக் கொண்டும் தம் உயிர்களைக் கொண்டும் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வார்கள். இத்தகையவர்கள் தாம் உண்மையாளர்கள்”** (49 : 16)

அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் சந்தேகமோ பயமோ இல்லாத அளவிற்கு நம்பிக்கையை அல்லாஹ் அவர்களுக்கு அளித்துக் கொள்வான். புரிந்து கொள்ளுங்கள் சந்தேகமுடையவர், நயவஞ்சகர்களின் வகுப்பில் உட்படுகின்றார். மேல் கூறிய, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வசனத்தின்பால் நான் திரும்பிக் கொள்கின்றேன். **“அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் நம்பிக்கை கொண்டு பின்னர் (எவ்வித)சந்தேகமும் (அதைப்பற்றி) இல்லாமல் இருக்கவும் தம் செல்வங்களைக் கொண்டும் தம் உயிர்களைக் கொண்டும் அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்வோர்கள்.**

அவ்வகையாளர்கள் தாம் உண்மையான நம்பிக்கையாளர்கள்" (49 : 16) "இத்தகையாளர்கள் தாம்" என்ற வார்த்தையில் குறிப்பிடபட்டிருக்கும் "இத்தகையாளர்களை" மட்டுமே நம்பிக்கையாளர்களின் வகுப்பில் உட்படுத்தப்பட்டிருக்கின்றது. மற்றனைவர்களையும் அதிலிருந்து வெளியேற்ற பட்டிருக்கின்றது. இது அர்த்தமாக்கிக் கொள்வது, உண்மையான நம்பிக்கையாளர் வெளிப்படையும் உட்படையுமான இரு நிலைகளிலும் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் நம்பிக்கை கொள்வோர்களாவார்கள். எவ்வித அய்யமோ பயமோயின்றி அவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர். அது அவர்களின் வார்த்தைகள் வழியும் செயல்கள் மூலமும் நிரூபித்துக் கொள்கின்றனர். அவர்கள் தம் உயிரைக் கொண்டும் செல்வங்களைக் கொண்டும் இறைவழியில் தியாகம் செய்வோர்களும் மேலும் அவ்வழியில் அயராத உழைப்போர்களும் ஆவார்கள். அல்லாஹ் கூறுகின்றான் இத்தகையவர்கள் தாம் உண்மையாளர்கள். மேல் கூறிய திருமறை வசனத்தில் "சந்தேகமில்லாதவர்கள்" என்ற வார்த்தையிலிருந்து களங்கமற்ற நம்பிக்கையாளருக்கு மட்டுமே அல்லாஹ்வின் வழியில் அயராத உழைப்பதற்கும் செல்வங்களை செலவு செய்வதற்கும் முடிந்துக் கொள்வது என்பது உறுதியாகின்றது. இவை இரண்டும் (இறை வழியில் அயராத உழைப்பு, இறை வழியில்செல்வங்களை செலவிடுதல்) நம்பிக்கையின் விளைவாகும். அதுவே இவ்வசனம் சந்தேகமின்றி நிரூபித்துக் கொள்வது.

## THE THIRD CONDITION

## மூன்றாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)

## AL-IKLAAS/ SINCERITY/ நேர்மை

### "சீர்க்கை" நெருப்பிற்கு இரையாக்கிக் கொள்ளும் நேர்மையும், நேர்மையான நம்பிக்கையின் சான்றுகளும்

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான் "அறிந்து கொள்வீராக! களங்கமற்ற மார்க்க வழிபாடுயாவும் அல்லாஹ்வுக்கே உரியது" (39 : 4) கட்டுபட்டுக் கொள்ளும் விஷயத்தில் அல்லாஹ்விடம் நேர்மையாகயிருக்கவும் மனசஞ்சலமின்றி அல்லாஹ்வை வணங்கி கொள்ளவும் வேண்டும். "ஜக்காத்தை" வழங்கி கொள்ளவும் வேண்டும் என்பதைத் தவிர அவர்களிடம் கட்டளையிடப்படவில்லை. இது தான் நேரான மார்க்கமாகும்" (98 : 6) நேர்மை என்றால் தூய்மையாகிக் கொள்தலாகும், அல்லாஹ்வை மட்டும் வணங்கிக் கொள்தலாகும், சீர்க்கிலிருந்தும் (இறைவனுக்கு இணைவைப்பதிலிருந்தும்) அதைப் போன்றே நிபாகிலிருந்தும் (நயவஞ்சகத்திலிருந்தும்) மீட்சியை பெற்றுக் கொள்தலாகும். எந்த பங்காளிகளுமில்லாத ஏகனாகிய அல்லாஹ்வை

வணங்குங்கள். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வின்றி மற்றெவருமில்லை என்றும் அவனுக்கு நிகராக மற்றொருவருமில்லை என்றும் மனுகுலத்தை தெரியப்படுத்துங்கள். திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். **“அறிந்து கொள்வீராக! களங்கமற்ற மார்க்க வழிபாடுயாவும் அல்லாஹ்வுக்கே உரியது”** (39 : 4)

பங்காளிகளில்லாத ஏகனாகிய அல்லாஹ்வுக்கு மட்டும் களங்கமற்ற நிலையில் சமர்பித்துக் கொள்ளும் நற்செயல்கள் மட்டுமே அவன் அவனது அடியார்களிடமிருந்து ஏற்றுக்கொள்வது. அதாவது இறை கட்டளைகளை களங்கமற்ற முறையில் கடைப்பிடித்துக் கொண்டும், நம் இறைவன் எல்லா நிலையிலும் முழுமை பெற்றவன் என்றும், அவனது படைப்புகளின் மீது பரிபூரணமான அதிகாரம் அவனுக்கு உண்டு என்றும், நேர்மையும் தூய்மையுமான வழிபாடுகள் அவனுக்கு மட்டும் உரியது என்றும் உணர்ந்தவாறு செய்யும் “இபாதத்துகளை” அவன் ஏற்றுக் கொள்கின்றான். ஆராதனையில் அவனுக்கு பங்காளிகளை வைத்துக் கொள்பவர்களிலிருந்து இதயங்களை தூய்மைப்படுத்திடவும் சுத்தம் செய்திடவும் வேண்டும். அல்லாஹ் விற்கு எவர் உதவியும் தேவையில்லை. எல்லா நிலையிலும் அவன் சுயம் போதுமானவனாகயிருக்கின்றான். அல்லாஹ்வை மட்டும் வணங்கிக் கொள்தல் என்பது அவனிடம் மட்டும் செய்யும் நேர்மையான ஆராதனையாகும். உள்படையும், வெளிப்படையுமான அனைத்து செயல்களிலும் பக்தர் இறைதிருப்தியையும் இறை அருகாமையையும் மட்டுமே நாடிக் கொள்ள வேண்டும்.

**“உண்மையான நம்பிக்கையில் இருக்க வேண்டும்”** என்பது கொண்டு அர்த்தமாக்கி கொள்வது மற்றனைத்து மதங்களிலிருந்தும் விலகி நிற்க வேண்டும் என்றாகும். காரணம் அம்மதங்கள் யாவும் தீனுல் இஸ்லாமிற்கு முரண்பாடாகயிருக்கின்றது என்பதனாலாகும். **பிரார்த்தனையும் “ஜக்காத்து”** வழங்குதலும் இறைவனிடம் செய்யும் இபாதத்து என்று இஸ்லாம் கற்பிக்கின்றது. உறுதியான மனமுடன், களங்கமற்ற வழிபாடுகள் இறைவனுக்கு அர்ப்பித்துக் கொள்தல் என்பதே அல்லாஹ்வை மட்டும் வணங்கி கொள்தல் என்பதால் அர்த்தமாக்கி கொள்வது. அத்தகையிலான ஆராதனை வழியாக அந்த அடியாரின் நிலையும் மகத்துவமும் உயர்ந்துக் கொள்ளவும், மதத்தின் அனைத்து கடமைகளையும் அவர் நிறைவேற்றிக்கொள்ளவும் செய்கின்றார். அதுவே ஏக இறை நம்பிக்கை. களங்கமற்ற மதமும் அதுவேயாகும். நேர்வழியைப் பெற்ற மக்களின் மதமும் அதன்றி வேறில்லை. அது அவர்களை சொர்க்கத்தின் பால் வழிநடத்தச் செய்கின்றது. மற்றனைத்தும் அவர்களை நெருப்பின் பால் கொண்டு செல்லும் வழியாகயிருக்கின்றது.

## THE FOURTH CONDITION

## நான்காவது ஒழுங்குமுறை

## AL-SIDDIQ/ TRUTHFULNESS / உண்மை

உண்மை ஒருபோதும் பொய்மையையும், வஞ்சகத்தையும் அங்கீகரித்துக் கொள்வதில்லை. **“அலீப் லாம் மீம்”** **(நான் அல்லாஹ் அனைத்தும் அறிபவன்)**

**“நாங்கள் ஈமான் கொண்டிருக்கின்றோம் என்று கூறுவதனால் மட்டும் அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டுவிடப்படுவார்கள் என்று மனிதர்கள் எண்ணிக் கொண்டார்களா? நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களையும் நாம் சோதித்திருக்கின்றோம். ஆகவே உண்மையுரைப்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் அறிவான். இன்னும் பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான்”** (29: 1-3)

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மற்று சில வசனங்களைப் பாருங்கள்.

**“இன்னும் மனிதர்களில் நாங்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாள் மீதும் ஈமான் கொள்கின்றோம் என்று கூறுவோரும் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் உண்மையில் நம்பிக்கை கொண்டோர் அல்லர். அவர்கள் அல்லாஹ்வையும் ஈமான் கொண்டோரையும் ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால் அவர்கள் உண்மையில் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கின்றார்களே தவிர வேறில்லை. எனினும் அவர்கள் இதை உணர்ந்து கொள்ளவில்லை. அவர்களுடைய இதயங்களில் ஒரு நோய்யுள்ளது. அல்லாஹ் அந்த நோயை அவர்களுக்கு இன்னும் அதிகமாக்கி விட்டான். மேலும் அவர்கள் பொய் சொல்லும் காரணத்தினால் அவர்களுக்கு துன்பந்தரும் வேதனையுமுண்டு”** (2: 9-11)

இந்த வசனத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டால், நாவினால் கூறிக்கொள்ளும் விஷயங்கள்யாவும் செயல்வடிவில் இருக்கின்றதா என்று பரிசோதித்து உறுதிப்படுத்திய பிறகே நம்பிக்கையாளர் யார் அவநம்பிக்கையாளர்யார் என்பதை தீர்மானித்துக் கொள்வது. எதென்றானாலும் சரி, அது செயலில் வராத காலம் வரையில் நாவைக் கொண்டு கூறிக் கொள்வதில் எவ்வித பலனுமில்லை. நிச்சயமாகவும் மனிதர்களை, அவர்களைக் கொண்டும் அவர்களின் செல்வங்களைக் கொண்டும் சோதித்துக் கொள்ளப்படும். நேர்மையானவர்களையும் நேர்மையற்றவர்களையும் பிரித்தறிந்துக் கொள்வதற்கும், உண்மையாளர்களையும் பொய்யாளர்களையும் பகுத்தறிந்துக் கொள்வதற்குமாக அவர்கள் சோதனைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள்.

**“அவர்கள் சோதனைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள்”** என்பதன் பொருள் அனுமதிக்கப்பட்ட விஷயங்களைக் கொண்டும் அனுமதிக்கப்படாத

விஷயங்களைக் கொண்டும் அவர்கள் சோதிக்கப்படுவார்கள் என்பதாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் முதலில் நம்பிக்கையைக் கொண்டும் மேலும் தொழுகையைக் கொண்டும் இன்னும் சக்காத்தைக் கொண்டும் மற்றும் சட்டதிட்டங்கள் கொண்டும் சோதித்துக் கொள்வான். இச்சோதனைகள் சிலமக்களுக்கு மிக கடினமாகயிருக்கும். அல்லாஹ்வின் இவ்வசனத்தை கவனியுங்கள்.

அல்லாஹ் அவர்களுக்கு ஆறுதல் அளித்தவாறு கூறுகின்றான். **அவர்களுக்கு முன்னிருந்தோர்களையும் இவ்வாறே சோதித்ததுண்டு**. இதைக் கொண்டு அர்த்தமாக்கிக் கொள்வது, இறைத்தூதர்களிலும் நம்பிக்கையாளர்களிலும் சிலரை வீச்சரிவாளால் அறுத்திட்டதுண்டு. மட்டுமின்றி சிலரை கொலை செய்யப்பட்டதுண்டு. இஸ்ரவேல் மக்களை முற்றிலும் கொடூரமாகவும் மிருகத்தனமாகவும் "பிர்ஔன்" துன்புறுத்தியதுண்டு. அதாவது அது உண்மையாளர்களை பகுத்தறிவதற்காக நிகழ்ந்த சோதனைகள் ஆகும். உண்மையாளர்களையும் பொய்யாளர்களையும் பிரித்தறிவதற்கான சோதனைகள் ஆகும். **"நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்"** என்ற அவர்களின் வார்த்தைகளிலிருந்து நிச்சயமாகவும் புரிந்திட வேண்டும் அவர்கள் கூறிக்கொள்வது உண்மையா அல்லது பொய்யா (என்பதை)?. சோதனைக்கு முன்னதாகவே அவர்களைக் குறித்து அல்லாஹ் நன்கறிகின்றான். சுருக்கமாக கூறினால் இந்த வசனத்தின் பொருள் உண்மையாளர்களை பகுத்தறிய வேண்டும் என்பதாகும். அதைப்போன்றே பொய்யாளர்களையும் பிரித்தறிய வேண்டும். இத்தகையான சோதனைகள் மூலமாகவே அதை பகுத்தறிய முடிவது. சோதனைகளின் அடிப்படை நோக்கமே இவ்வகை தரம் திரித்தலாகும்.

**மனிதர்களில் சிலருண்டு (நயவஞ்சகர்கள்) அவர்கள் கூறுவார்கள் "நாங்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொள்கின்றோம்" இவ்வசனம் வாயிலாக ஆற்றல் மிக்க அல்லாஹ் நயவஞ்சகர்களின் இயல்பை திறந்துக் காட்டுகின்றான். தங்களின் வாயினை பயன்படுத்தி நம்பிக்கை விஷயங்களை கூறிக்கொண்டு மக்களின் முன்னால் அவர்கள் ஒரு முகத்தை காட்டிக் கொள்கின்றனர். அதே நேரம் அவர்களின் இதயங்களுக்குள் குடி கொள்ளும் அவநம்பிக்கையை அவர்கள் மறைத்துக் கொள்கின்றனர். இது வழியாக அல்லாஹ்வை ஏமாற்றிக் கொள்ளலாம் என அவர்கள் வீணாசைக் கொள்கின்றனர். நம்பிக்கையாளர்களின் இதயங்களை தங்களின்பால் ஈர்த்துக் கொள்ள இந்த பொய்முகம் தங்களுக்கு உதவிபுரியுமென அவர்கள் எண்ணிக் கொள்கின்றார்கள். ஆனால் இந்த ஏமாற்றுதலின் பலன் நிச்சயமாகவும் மறித்தாகவேயிருக்கும். அவர்கள் உண்மையில் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கின்றனர். அவர்களின் அறிவின்மையும் பாவகறை கொண்ட மனசாட்சியும் காரணம் அதை அவர்கள் உணர்ந்துக் கொள்வதில்லை. வஞ்சகத்தினுடையவும் பொய்மையுடையவும் பாதையில் அவர்கள் வழிநடக்க காரணமாக இருந்தது, அவர்களின் சந்தேகங்களாகும். அவர்களின் இதயங்கள் நோய்வாய்ந்ததாகயிருந்தது. அல்லாஹ் அவர்களின் நோயினை அதிகரிக்கச்**

செய்தான். அவர்கள் செய்த தவறின் அளவிற்கு ஏற்றவாறு தண்டனையும் அளிக்கப்படுகின்றது. இவ்வுலக வாழ்க்கையில் அவர்களின் தண்டனை, இஸ்ரவேல் மக்களில் பட்ட அவ நம்பிக்கையாளர்களின் விஷயத்தில் அல்லாஹ் கூறியதுப் போன்றேயிருக்கும்.

"அவர்கள் நேர்வழியிலிருந்து சறுகிய பொழுது அல்லாஹ் அவர்களுடைய இதயங்களை நேர்வழியிலிருந்து சறுகச் செய்தான். அன்றியும்- ஃபாஸிக்குகளான (பாவம் செய்வோரான) சமூகத்தாரை அல்லாஹ் நேர்வழியில் செலுத்தமாட்டான்"(61: 6)

மறுவுலகில் நயவஞ்சகர்களை காத்திருக்கும் தண்டனைகளைக் குறித்து ஆற்றல் மிக்க அல்லாஹ் கூறுகின்றான்.

"அவர்களின் வஞ்சகங்கள் காரணம் அவர்களுக்கு மிக கடுமையான தண்டனையுண்டு". சூரா அன்னிசாவில் அல்லாஹ் கூறுகின்றான்.

"நிச்சயமாக இந்த நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களை வஞ்சித்து விடுவான். தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கின்றார்கள். மனிதர்களுக்கு தங்களை காண்பிப்பதற்காகவே நிற்கின்றார்கள். இன்னும் மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூறுவதில்லை. இந்த முனா.'.பிக்குகள் மு.'.மின்களின் பக்கமுமில்லை கா.'.பிர்களின் பக்கமுமில்லை. இரு பிரிவினர்களுக்கிடையே தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் எவரை வழி தவறச் செய்துவிட்டானோ அவருக்கு யாதொரு வழியையும் நீர் காணமாட்டீர்" (4: 143, 144).

நயவஞ்சகர்களின் அந்தஸ்த் இல்லாத நடவடிக்கைகளைக் குறித்தும் வளைந்த சிந்தனைகளைப் பற்றியும் இந்த வசனம் வாயிலாக அல்லாஹ் வெளிப்படுத்தி காட்டுகின்றான். மக்கள் முன்னால் ஈமான் உண்டு என்று நடித்துக்காட்டியும் தங்களின் அவநம்பிக்கையை மறைத்து பிடித்தும் அவர்கள் அல்லாஹ்வை வஞ்சித்துக் கொள்ள முயர்ச்சிக்கின்றார்கள். அல்லாஹ் அவர்களின் அந்த நேர்மையற்ற தந்திரங்களைக் குறித்து உணர்ந்து விடவில்லை என்றும், மக்கள் முன்னால் இந்த நெறித்தவறிய தந்திரங்களை அவன் வெளிப்படுத்திட மாட்டான் என்றும் அவர்கள் எண்ணுகின்றனர். அவர்களின் அச்சிந்தனைகளும், செயல்களும், மன வஞ்சகமும் விரல்சுண்டுவது அவர்களின் சாதாரண புத்தியைக் கூட அல்லாஹ் கீழ்மேலாக திருப்பிக் கொண்டான் என்ற உண்மையின் பாலாகும். பரிகாசத்திற்கும், அவமானத்திற்கும் நிந்தைக்கும் ஆளாகிக் கொள்வதற்கு சுயம் முயர்ச்சித்துக் கொள்வதைவிட மிகப்பெரிய புத்தியீனம் வேறெது?

இந்த சிந்தனைகள் விரல் சுண்டிக் கொள்வது, நயவஞ்சகர்களின் மனநிலை பாகமற்றது என்றாகும். அல்லாஹ்வுக்கு கட்டுப்படாமல் இருந்தும் தம்

செயல்கள் முழுமை பெற்றவையும் நேர்மையானவையும் என்று எண்ணிக் கொள்ள வஞ்சகராகயிருந்தும் அவர்களுக்கு முடிகின்றது. இறுதிநாளில் இந்த வஞ்சகத்தைக் கொண்டு என்னபலன்?

சூரா அல்-ஹதீதில் அல்லாஹ் கூறுகின்றான்.

முனா∴பிக்கான ஆண்களும் பெண்களும் ஈமான் கொண்டவர்களை நோக்கி: "எங்களை கவனியுங்கள். உங்கள் ஒளியிலிருந்து நாங்களும் பற்ற வைத்துக் கொள்கின்றோம் என்று கூறும் தினத்தை நினைவூட்டுவீராக. அவர்களுக்குக் கூறப்படும் உங்களுக்குப் பின்னால் திரும்பிச் சென்று, பின்னர் ஒளியைத் தேடிக் கொள்ளுங்கள். பிறகு அவர்களுக்கிடையே ஒரு சுவர் எழுப்பப்படும், அதற்கு ஒரு வாயில் இருக்கும். அதன் உட்புறம் இறை ரஹ்மத் இருக்கும். ஆனால் அதன் வெளிப்புறத்தில் எல்லாத்திசையிலும் வேதனையிருக்கும். இவர்கள் மு∴மின்களைப் பார்த்து "நாங்கள் உங்களுடன் இருக்கவில்லையா?" என்று சப்தமிட்டுக் கூறுவார்கள். மெய்தான் எனினும் நீங்களே உங்களைச் சோதனையிலாழ்த்தி விட்டீர்கள். நீங்கள் எதிர் பார்த்தீர்கள் சந்தேகமும் கொண்டிருந்தீர்கள். அல்லாஹ்வின் கட்டளை வரும் வரையில் உங்களுடைய வீண் ஆசைகள் உங்களை மயக்கிவிட்டன. அன்றியும் மயக்குபவனான (ஷைத்தான்). அல்லாஹ்வை பற்றி உங்களை மயக்கி விட்டான் என்று மு∴மின்கள் கூறுவார்கள்" (57 : 14-15)

## THE FIFTH CONDITION

## ஐந்தாம் நிபந்தனை (ஒழுங்குமுறை)

## AL-MUHABBAH/ LOVE/ அன்பு

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வின்றி வேறெவருமில்லை (லா இலாஹ இல்லல்லாஹ்) என்ற வசனத்தின் மீதான அன்பு அதன் அர்த்தத்தையும் அதன் மீதான மகிழ்ச்சியையும் விவரிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான்.

"அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கேற்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கின்றார்கள். ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள். அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள். இன்னும் அக்கிரமக்காரர்களுக்குப் பார்க்க முடியுமானால் அல்லாஹ் தரவிருக்கும் வேதனை எப்படியிருக்கும் என்பதைக் கண்டு கொள்வார்கள் அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது. நிச்சயமாக தண்டனை கொடுப்பதில் அல்லாஹ் மிகவும் கடுமையானவன் (என்பதை கண்டு கொள்வார்கள்)" (2:166)

மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

“மு.ஃ.மின்களே! உங்களில் எவரேனும் தன் மார்க்கத்தை விட்டு மாறிவிட்டால் அப்பொழுது அல்லாஹ் வேறு ஒரு கூட்டத்தாரைக் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான் அவனை அவர்களும் நேசிப்பார்கள். அவர்கள் மு.ஃ.மின்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள் . கா.ஃ.பிர்களிடம் கடுமையாக இருப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வார்கள். நிந்தனைக்கு அஞ்சமாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருட்கொடையாகும். இதை அவன் நாடியவருக்குக் கொடுக்கின்றான். அல்லாஹ் மிகவும் விசாலமானவனும் (எல்லாம்) நன்கறிந்தவனுமாக இருக்கின்றான்” (5:55)

பரிசுத்த நபி முஹம்மது(ஸல்) அவர்கள் நம்மிடம் கூறியிருக்கின்றார். எவர் ஒருவரிடம் கீழ்கூறப்பட்டிருக்கும் மூன்று தன்மைகள் இருக்கின்றதோ அவர் நம்பிக்கையின் இனிமையை அனுபவித்துக் கொள்வான்.

1. மற்றெதைவிடவும் அல்லாஹ்வும் அவனது தூதரும் அவருக்கு பிரியமாகயிருக்கும்.
2. அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நாடிக்கொண்டு ஒருவரை நேசிப்பார்.
3. ஒருவரை அல்லாஹ் அவநம்பிக்கையிலிருந்து மீட்சித்தப்பின் மேலும் அவர் அவநம்பிக்கையின் பால் திரும்பச் செல்வதை நரகத்தீயில் எறிந்துக் கொள்வதை வெறுப்பதைப் போன்று வெறுத்துக் கொள்வார்.

“லா இலாஹ இல்லல்லாஹ்” என்ற வசனத்தின் உள்கருத்தையும் அதன்பாலான மகிழ்ச்சியையும் இரண்டு விஷயங்கள் வாயிலாக நமக்கு பெற்றுக் கொள்ள முடிந்துவிடும்.

1. இறைவன் ஏகனும் பங்காளிகளில்லாதவனுமாகயிருக்கின்றான்.அகவே முற்றிலும் களங்கமற்ற வகையில் அவனை வணங்கிட வேண்டும். அல்லாஹ்வுக்கு இணை வைப்பதை நிராகரித்துக் கொள்ள வேண்டும். மதத்தின் அடிப்படை கருத்து இரண்டாகின்றது. முதலாவது எந்த பங்காளிகளுமில்லாத அல்லாஹ்வை வணங்குவதற்கான கட்டளை, அதன்பாலான ஊக்குவித்தலும் திடமான தீர்மானமும். அவ்வாறு செயல்படாமலிருப்பவர்களை “காபிர்” ஆக எண்ணிக்கொள்தல் போன்றவை உட்படுகின்றது. இரண்டாவதாக அல்லாஹ்வுக்கு இணை வைப்பதற்கு எதிராக மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தல். அதற்கு எதிராக ஆற்றல் வாய்ந்த நிலையில் குரல் கொடுத்தல், அதை எதிர்த்துக் கொள்தல், அதிலிருந்து விலகிக் கொள்ளாதவர்களை காபிர் ஆக எண்ணிக் கொள்தல், போன்றவை உட்படுகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்.

அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கொப்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கின்றார்கள். ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள் இன்னும்

**அக்கிரமக்காரர்களுக்குப் பார்க்கமுடியுமானால் (அல்லாஹ் தரவிருக்கும்) வேதனை எப்படியிருக்கும் என்பதைக் கண்டு கொள்வார்கள். அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது. நிச்சயமாக தண்டனை கொடுப்பதில் அல்லாஹ் மிகவும் கடுமையானவன் (என்பதையும் கண்டு கொள்வார்கள்)** (2: 166)

இந்த வசனம் இடம் பெற்றிருப்பது அல்லாஹ்வின் ஏகத்துவத்தை சுட்டிக்காட்டிடவும் அதை ஆதாரத்தின் அடிப்படையில் எடுத்துரைத்திடவும் செய்யும் வசனத்திற்கு பிறகாகும். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் மட்டுமாகயிருக்கின்றான் என்றிருந்தும், அதாவது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் மட்டுமாவான் என்பதற்கு போதுமான ஆதாரங்கள் இருந்தும் மக்களில் சிலர் அல்லாஹ்வுக்கு நிகராகவும் அவனுக்கு பங்காளியாகவும் வேறுசிலரை கற்பனையில் கொண்டுள்ளனர். ஆற்றல் மிக்கவனும் எல்லாம் வல்லவனுமாகிய அல்லாஹ்வின் மீது வைத்துள்ள அதே நேசத்தை அவர்கள் தங்களின் அக்கற்பனை பங்காளிகளின் மீதும் வைத்துள்ளனர்.

**"நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள்"** என்ற வசனத்தைக் குறித்து ஞானம் பெற்றோர்கள் இரண்டு கருத்தைக் கூறியிருக்கின்றார்கள்.

1. நம்பிக்கையாளர்கள் அவநம்பிக்கையாளர்களை விட அதிகமான அன்பை அல்லாஹ்வின் மீது வைத்துள்ளனர். ஏனெனில் நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வை மட்டும் நேசிக்கின்றார்கள். பிறராகட்டும் அவர்களின் கற்பனை பங்காளிகளுக்கு அதை பகுத்து வழங்கிக் கொள்கின்றார்கள்.
2. அவநம்பிக்கையாளர்கள் இறைவனுக்கு நிகராக அவர்கள் எண்ணுகின்ற கற்பனைபங்காளிகளை நேசிப்பதை விட மேலாக நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றார்கள்.

இந்த இரண்டு விளக்கங்களில் முதல் விளக்கமே சிறந்தது. முதல் விளக்கம் மிக தெளிவாகயிருக்கின்றது. ஆற்றல் மிக்கவனாகிய அல்லாஹ் அனைத்தையும் உணருகின்றவன். தடை செய்யப்பட்ட ஒரு பெரிய "சீர்க்கை" குறித்து இந்த வசனம் ஒளி வீசுகின்றது. அல்லாஹ்வையும், அல்லாஹ்வுக்கு நிகராக அவநம்பிக்கையாளரின் கற்பனையிலிருக்கும் பங்காளிகளையும் ஒன்று போல் நேசிப்பதை பெரிய சீர்க்கின் பட்டியலில் உட்படுத்தபட்டிருக்கின்றது.

**"நம்பிக்கை கொண்டோர்களே! உங்களில் எவரேனும் தன்மார்க்கத்தை விட்டு மாறி விட்டால்"** என்ற வசனம் மறைவான தத்துவங்களை உட்கொள்கின்றது. அதாவது அவர்கள் மார்க்கத்தை விட்டு மாறிவிட்டால் அனைத்து புகழுக்கும் உரியவனாகிய அல்லாஹ் அவனது ஆற்றலையும் தேவையின்மையையும் நிரூபித்துக் காட்டுவதற்கும், அந்த மார்க்கத்தை நிலை நாட்டிக் கொள்வதற்குமாக வேறு ஒரு சமூகத்தை படைத்துக் கொள்வான். நம்பிக்கை கொண்ட கூட்டத்தாருக்கு ஐந்து சிறப்பு தன்மைகள் இருக்கும்.

1. **அவனது மார்க்கத்தை உயர்த்திபிடிக்கும் நம்பிக்கையாளர்களை அல்லாஹ் நேசிக்கின்றான். நம்பிக்கைகொண்டோர்களாகட்டும் அல்லாஹ்வின் மீதான நேசம் காரணம் அவனது கட்டளைகளுக்கு கட்டுப்பட்டுக் கொள்வதோடு தடை செய்யப்பட்டவையிலிருந்து அகன்று நிற்கவும் செய்கின்றார்கள்.**
2. **அவநம்பிக்கையாளர்களுக்கு எதிராக நம்பிக்கைகொண்டோர்கள் ஆற்றலுடையவர்களாகவும் உறுதி வாய்ந்தவர்களாகவும் நிலை கொள்வார்கள். திருக்குர்-ஆன் கூறுகின்றது "அவர்கள் அவநம்பிக்கையாளர்களிடம் கண்டிப்பானவர்கள்" (48-30)**
3. **அவர்கள் மற்று நம்பிக்கை கொண்டோர்களிடம் கருணையுடனிருப்பார்கள்.**
4. **அல்லாஹ்வின் வசனங்களை உயர்த்திப்பிடித்துக் கொள்வதற்கும் அவனது மார்க்கத்தை மதித்துக் கொள்வதற்கும் நம்பிக்கை கொண்டோர்கள் அதிகமளவில் உழைப்பார்கள்.**
5. **தீய நோக்கமுடையவர்களை அவர்கள் அஞ்சுவதில்லை. "ஷரிஅத்தின்" பாடங்களுக்கு ஏற்ப அவர்கள் அனைத்து சூழ்நிலையிலும் உண்மையை மட்டும் போதித்துக் கொள்வார்கள்.**

சுருக்கமாக இந்த வசனங்கள் உள்ளத்தைக் கொண்டு அல்லாஹ்வை வணங்குவதன் அவசியத்தைப் பற்றியும், இறைவனுக்கும் அவனது அடியாருக்கும் ஒன்றுக் கொன்றான நட்புறவின் ஆழத்தைக் குறித்தும் தெளிவாக விளக்கமளிக்கின்றது. நம்பிக்கையாளர்களின் வலிமை வாய்ந்த நட்பை அல்லாஹ் விலை மதிக்கின்றான். மங்களமான முடிவு பயபக்தியுடையோர்களாகிய நம்பிக்கையாளர்களுக்கே உரியது.

## SWEETNESS OF FAITH (IMAAN)

## விசுவாசத்தின் இனிமை

அல்லாஹ்வுக்கும் அவனது திருதூதருக்கும் கட்டுப்பட்டுக் கொள்வதில் மகிழ்ச்சியடையுங்கள். இறைவழியில் தியாகம் செய்வதற்கு தயாராகிடுங்கள். பௌதீக பொருட்களுக்கும் சுகங்களுக்கும் மேலாக இறை வழியை விலை மதித்துக் கொள்ளுங்கள். நம்பிக்கையின் இனிமை என்பதால் அர்த்தம், இந்நிலையினையாகும். அதாவது அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதுமான நேசம் காரணம் நம்பிக்கையாளர்கள் கட்டுபாட்டின் எல்லையினை தாண்டிக் கொள்வதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அல்லாஹ்வை அங்கீகரித்துக் கொள்ளுங்கள். முஹம்மது நபி(ஸல்) அவர்களை தூதராக ஏற்றுக் கொள்ளுங்கள். இஸ்லாமை மதமாக ஒத்துக் கொள்ளுங்கள். அந்நேரம் உங்களுக்கு ஈமானின் இனிமையை அனுபவித்து விடலாம்.

இறைவன் மீதும் அவனது திருதூதர் மீதும் உண்மையான நேசத்தை உருவாகிக் கொள்வதற்கும் “குப்றி”லிருந்து விலகி கொள்வதற்குமாக நம் ஆன்மாவை ஆற்றலுடையதாக்க வேண்டும். ஒரு நபரின் இரத்தத்திலும் மாமிசத்திலும் நம்பிக்கையின் அம்சங்கள் உருகி சோரும் பொழுது மட்டுமே இதயம் நம்பிக்கை வழியாக திருப்தியும், மனம் ஆனந்தம் வழியான சுகமும் பெற்றுக் கொள்வது.

அத்தகையாளர்கள் ஈமானின் இனிமைக்கு உரிமையாளராக பரிணமிக்கின்றனர். அல்லாஹ்வின் மீதான அன்பு அல்லாஹ்வின் நேசத்தின் பலனாகும். இறைவனின் மீதான அன்பை இவ்வாறும் நமக்கு கூறிக் கொள்ளலாம். ஆற்றல்மிக்கவனும் புகழுக்குரியவனுமாகிய அல்லாஹ்வுக்காக, அவனது திருப்தியை நாடிக்கொண்டு, இதயபூரணமாக மேற்கொள்ளும் செயல்களாகும் இறை அன்பை வெளிப்படுத்திக் கொள்வது. அதாவது **இறைவன் நேசிப்பதை மட்டும் நம் இதயம் நேசித்துக் கொள்ளவும் இறைவன் வெறுத்துக் கொள்வதை நம் இதயம் வெறுத்துக் கொள்ளவும் செய்யும் நிலை.**

தூயதூதர் கற்பித்தப்படி இந்த மூன்று தன்மைகள் எவரிடம் இருக்கின்றதோ அவர் ஈமானின் இனிமையில் மகிழ்ச்சியை பெற்றுவிடுவார். நம்பிக்கையின் இனிமை என்பது நேசத்திலிருந்து உருவாகிக் கொள்வதாகும். ஒருவர் ஏதேனும் ஒன்றை விரும்பிக் கொள்ளவும் அதைப் பெற்றுக் கொள்ளவும் செய்யும் பொழுது அவர் இனிமையும் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைகின்றார். நேசித்துக் கொண்டதையும் விரும்பிக் கொண்டதையும் அடையும் பொழுது ஒருவர் ஆனந்தமாகின்றார்.

ஈமானின் இனிமை என்பது ஒரு இறையடியார் இறைவன் மீது வைத்திருக்கும் முழுமை பெற்ற நேசத்திலிருந்து உற்பத்தியாகின்றது இறைவனுக்காக மற்றொருவரை நேசிக்கும் அளவிற்கு இறைநேசம் முழுமையடைகின்றது. **அல்லாஹ்வின் விருப்பத்தை நடைமுறையில் கொண்டுவரும் இறைத்தூதரையும் முஜத்தீதையும் அல்லது கலீ·.பத்துல்லாஹ்வையும் ஒருவர் நேசிக்கும் பொழுது அது அல்லாஹ்வின் மீதான நேசமாக பரிணமிக்கின்றது.**

அல்லாஹ்வின் மீதான நேசம் ஒருவரின் இதயத்திற்குள் முளைத்துக் கொள்ளும் நேரம் அதற்கு மாறான அனைத்தையும் அவர் வெறுத்துக் கொள்கின்றார். அந்த நேச ஒளியால் இஸ்லாமின் வனப்பு வெளிப்பட்டுக் கொள்கின்றது. அவநம்பிக்கையும் அறிவின்மையும் அது வாயிலாக மறைந்து விடுகின்றது. அத்தகையான ஒரு நண்பன் அவர் நேசித்துக் கொள்ளும் நபர்களின் கூடவேயிருப்பார். ஆற்றல் மிக்க அல்லாஹ்வை நம்பிக்கை கொண்டவர்கள் நேசிக்கின்றனர். அல்லாஹ் அவர்களையும் விரும்புகின்றான். குர்-ஆன் கூறுகின்றது. **“அவன் அவர்களை நேசிக்கின்றான். அவர்களும் அவனை நேசிக்கின்றனர்”.**

முஸ்லீமாக பிறந்த ஒருவருக்கு மதமாற்றம் வழியாக இஸ்லாமை ஏற்றுக் கொள்ளும் அவநம்பிக்கையாளரான ஒருவரை விட மேன்மையுண்டு என்ற சாதாரண நம்பிக்கை அடிப்படையற்றதாகும். உண்மையில் மேல்கூறிய தன்மைகளைக் கொண்ட எவர் ஒருவருக்கும் அத்தன்மைகளில்லாதவர்களை விட மேன்மையுண்டு. அதனாலாகும் ஆரம்பகால நம்பிக்கையாளர்களுக்கு முஸ்லீமாக பிறந்தவரை விட மேன்மையிருப்பது.

## THE SIXTH CONDITION

## ஆறாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)

## AL-INQIAD/ SUBMISSION/ கீழ்பணிதல்

அல்லாஹ்வின் மகிழ்ச்சியை நாடியவாறு அவன் மீதான கடமைகளை நேர்மையுடன் நிர்வகித்துக் கொள்தல் என்பதே கீழ்பணிதலின் சரியான நிபந்தனை. கீழ்பணிதலின் அடையாளமாக எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்-ஆனில் கூறுகின்றான்.

**"நீங்கள் உங்கள் இறைவன்பால் திரும்பி அவனுக்கே முற்றிலும் வழிபடுங்கள்"** (39: 55)

**"எவர் நன்மை செய்யக்கூடிய நிலையில் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபட்டு இப்ராஹீமுடைய தூய மார்க்கத்தையும் பின்பற்றுகின்றாரோ அவரை விட அழகிய மார்க்கத்தை உடையவர் யார்?"** (4: 126)

**"உம் இறைவன் மேல் சத்தியமாக அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாதவரையில் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள்"** (4: 66)

ஒரு தூய நபி மொழியில் காணலாம் **"நான் கொண்டு வந்ததை, உங்கள் விருப்பங்கள் பின்பற்றிக் கொள்ளாத வரையில் உங்களில் எவரும் நம்பிக்கையாளராகுவதில்லை"** இதன் பொருள் என்பது முழுமையாக கீழ்பணிந்து கொள்தலும் கட்டுப்பட்டுக் கொள்தலும் ஆகும். திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறிய இந்த வசனத்தில் அதாவது **"நீங்கள் உங்கள் இறைவன்பால் திரும்பிக் கொள்ளுங்கள்"** என்பதன் பொருள் இறைவனின் அருகாமையைப் பெற்றுக் கொள்வதற்காக முழு கட்டுப்பாடுடன் அவன்பால் திரும்பவேண்டும், அதற்கு இதயம் சாக்சியாகயிருக்க வேண்டும் என்றாகும். அதை தொடர்ந்து **"அவனுக்கே முற்றிலும் வழிபடுங்கள்"** என்ற வசனத்தின் பொருள் தனிப்பட்ட நபர் என்ற

நிலையில் எல்லா வகையிலும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் முன் முழுமையாக கீழ்பணிந்துக் கொள்ளவேண்டும் என்றாகும். நீங்கள் **“உங்கள் இறைவன்பால் திரும்பிக் கொள்ளுங்கள் அதை தொடர்ந்து அவனுக்கே முற்றிலும் வழிபடுங்கள்”** என்ற வசனத்திலிருந்து உணர வேண்டியதாவது அது நேர்மையாளராக பரிணமிப்பதற்கான சான்றாகயிருக்கின்றது. நேர்மையில்லாத நிலையில் உள்படையாகவோ வெளிப்படையாகவே செய்யும் செயல்களுக்கு எவ்வித பயனும் இருப்பதில்லை. மதசம்பந்தப்பட்ட சிறியதோ பெரியதோ ஆன எவ்வித சச்சரவுகள் எழும்பிக் கொண்டாலும் அதன் தீர்ப்புக்காக அல்லாஹ்விடமும் அவனது தூதரிடமும் செல்லுங்கள். அதாவது அல்லாஹ்வின் “கித்தாப்பு” (குர்-ஆன்) வாயிலாகவும் திரு தூதரின் திரு சுன்னத்து மூலமாகவும் அதற்கு தீர்வு கண்டு கொள்ளுங்கள். அவற்றில் அனைத்து விதமான சச்சரவுக்கும் பரிகாரம் கூறப்பட்டிருக்கும். அப்பரிகாரம் அல்லது அத்தீர்ப்பு சிலவேளை பொதுவான முறையிலும், சிலவேளை மறைவான நிலையிலும், சிலவேளை சிந்தித்துக் கொள்வதற்கு கவனமூட்டும் வகையிலும் அல்லது நல்லொழுக்க ஆசாரங்கள் வழியாகவும் கூறப்பட்டிருக்கும். நிச்சயமாகவும் மதத்தின் அஸ்திவாரம் என்பது திருக்குர்-ஆனும் திரு சுன்னத்துமாகும். அதன்றி உண்மையான ஈமான்(நம்பிக்கை) கிடைப்பதில்லை. அல்லாஹ்விடமான நேர்மையும் இறைத்தூதரின் சுன்னத்தை பின்பற்றிக் கொள்வதன் அவசியமும் மிக முக்கியத்துவமானதாகும். காரணம் இவை இரண்டுமே விஷயங்களை நன்கு உணர்ந்து கொள்வதற்கு முற்றிலும் சிறந்த வழி.

அல்லாஹ்வினுடையவும் அவனது தூதருடையவும் சட்டங்களுக்கு மறைவாகவும் வெளிப்படையாகவும் கீழ்பணிந்துக் கொள்வதன் அவசியத்தைப் பற்றி திருக்குர்-ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

**“ஏனெனில் அல்லாஹ் இறக்கிய (வேதத்)தை திட்டமாகவே அவர்கள் வெறுத்தார்கள். ஆகவே அவர்களுடைய செயல்களை அவன் பயனற்றவையாக ஆக்கி விட்டான்”** (47: 10)

அதே சூரத்தில் மற்றொரு வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான் “**நிச்சயமாக இவர்கள் அல்லாஹ்வுக்குக் கோபமூட்டுவதையே பின்பற்றி அவனுடைய திருப்தியை வெறுத்துக் கொண்டனர். ஆகவே அவர்களுடைய செய்கைகளை அவன் பயனில்லாதவையாக ஆக்கி விட்டான்”** (47: 29)

அல்லாஹ் நாடுவது எதோ அதற்கு உகுந்தவாறு நடந்துக் கொள்தல் என்பது ஒவ்வொரு நம்பிக்கையாளர்களுடையவும் கடமையாகும். அவ்வாறேயானால் அல்லாஹ் அவர்களிடம் என்னென்ன கட்டளைகள் விடுத்துள்ளானோ அதை அவர்களுக்கு கடைபிடித்துக் கொள்ள முடியும். அல்லாஹ்வின் மீதான அவர்களின் அன்பு, அந்நிலையில் உயாந்துக் கொண்டால் அனைத்துவித இபாதத்துகளையும் மிக நல்ல நிலையில் செய்து கொள்வதற்கு முடிவதோடு, எல்லாம் வல்ல இறைவன் வெறுத்துக் கொள்ளும் அனைத்து விஷயங்களையும் அவர்களும் வெறுத்துக் கொள்வார்கள். அல்லாஹ் தடைவிதித்துள்ள அனைத்து

விஷயங்களிலிருந்தும் அவர்கள் விலகி நிற்க வேண்டும். மனதாலும், வார்த்தையாலும், செயல்களாலும் தூய்மை பெற்ற நிலையில் பக்தரை உயர்த்திக் கொள்வதற்கே அல்லாஹ் விரும்புகின்றான்.

தூதுவ அரசன் முஹம்மது(ஸல்) அவர்கள் இவ்விஷயத்தை உறுதி வாய்ந்த நிலையில் விளக்கிக் கொள்வதை கவனியுங்கள்.

**“தம்மைவிடவும் தம் புதல்வ-புதல்விகளை விடவும் மானிட குலத்தை விடவும் என்னை நீங்கள் நேசிக்காதவரையில் உங்களில் எவரும் நம்பிக்கையாளராகுவதில்லை”**

ஆகவே உணர்ந்துக் கொள்ளுங்கள். முழு மானிட குலத்தை விடவும் மேலான வகையில் மிக உன்னதமான பதவியும், நேசமும் தூதருக்கு அளித்தக் கொள்ளாத வரையில் ஒரு நபர் உண்மையான நம்பிக்கையாளராகுவதில்லை. தூய தூதர் மீதான நேசம் ஒருவரில் தோன்றுவது அந்த தூதரை தோற்றுவித்தவனை நேசித்துக் கொள்வதன் மூலமேயாகும். உண்மையான நேசம் என்பது இறைத்தூதர் விரும்பும் விஷயங்களை நாமும் விரும்புவதோடு அன்னார் வெறுத்துக் கொண்ட விஷயங்களை நாமும் வெறுத்துக் கொள்ள வேண்டும் என்றாகும்.

## THE SEVENTH CONDITION

## ஏழாவது நிபந்தனை (ஒழுங்குமுறை)

## AL-QUBOOL/ ACCEPTANCE/ ஏற்றுக் கொள்தல்

ஏற்றுக் கொள்தல் என்பதற்கு நிராகரித்தல் என்பது எதிராகும் , எல்லாம் வல்ல அல்லாஹ் திருமறை வாயிலாக ஏற்றுக் கொள்தல் என்பதற்கு அத்தாட்சியாக கூறுகின்றான்.

**“இவ்வாறே உமக்கு முன்னரும் நாம் தூதரை எந்த ஊருக்கு அனுப்பினாலும் அவர்களில் செல்வந்தர்கள் நிச்சயமாக நாங்கள் எங்கள் மூதாதையரை ஒரு மார்க்கத்தில் கண்டோம். நிச்சயமாக நாங்கள் அவர்களின் அடிச்சுவடுகளையே பின்பற்றுகின்றோம். என்று கூறாதிருக்கவில்லை”**

**“உங்கள் மூதாதையரை எதன் மீது நீங்கள் கண்டீர்களோ அதை விட மேலான நேர்வழியை நான் உங்களுக்கு கொண்டு வந்திருந்த போதிலுமா? என்று(தூதர்) கேட்டார். அதற்கு அவர்கள் நிச்சயமாக நாங்கள் எதைக் கொண்டு நீங்கள் அனுப்பப்பட்டிருக்கிறீர்களோ அதை நிராகரிக்கின்றோம் என்று சொன்னார்கள்”** (43: 24-25)

அல்லாஹ் மேலும் தெரிவிக்கின்றான்

**“அன்றியும் அச்சமூட்டி எச்சரிப்போரை நாம் எந்த ஓர் ஊருக்கு அனுப்பிய போதும் அங்கிருந்த செல்வந்தர்கள் நிச்சயமாக நாங்கள் நீங்கள் எதைக் கொண்டு அனுப்பப்பட்டிருக்கின்றீர்களோ அதை நிராகரிக்கின்றோம் என்று கூறாமலிருக்கவில்லை”** (34: 35)

எல்லாம் வல்ல அல்லாஹ் மேலும் கூறுகின்றான்.

**“அல்லாஹ்வைத் தவிர இறைவன் இல்லை என்று அவர்களுக்குக் கூறப்பட்டால் மெய்யாகவே அவர்கள் பெருமையடித்தவர்களாக இருந்தனர். ஒரு பைத்தியக்காரப் புலவருக்காக நாங்கள் மெய்யாக எங்கள் தெய்வங்களை கைவிட்டு விடுகின்றவர்களா? என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்”** (37: 36-37)

தூய தூதர்(ஸல்) அவர்கள் நேர்மார்க்கத்தையும் அறிவையும் உவமைபடுத்திக் கொள்வது பூமியில் பொழியும் மழையுடனாகும்.

பூமியின் சில பகுதி விளைவை தருவதாகயிருக்கும். அப்பகுதி தண்ணீரை தம்பால் ஈர்த்துக் கொள்ளவும், செடி கொடிகளை ஏராளம் முளைக்க வைக்கவும் செய்கின்றது. மற்று சில பகுதி கடினதன்மையுடையதாகயிருக்கும். அவ்விடம் தண்ணீரை தக்கவைத்துக் கொள்கின்றது. அத்தண்ணீரை மக்களுக்கு பயனளிக்குமாறு அல்லாஹ் வைத்துள்ளான். அதிலிருந்து அவர்களுக்கும் அவர்களின் ஆடு மாடுகளும் அருந்திக் கொள்ளவும் விவசாயத்திற்காகவும் மற்றும் பயன்படுத்திக் கொள்ளவும் செய்கின்றனர். ஆனால் சில பகுதிகள் பலனற்றதாகயிருக்கும். அவ்விடத்திற்கு தண்ணீரை ஈர்த்துக் கொள்வதற்கோ செடி கொடிகளை முளைக்கச் செய்வதற்கோ ஆன ஆற்றலில்லாமலிருக்கும்.

**எல்லாம் வல்ல அல்லாஹ் தம் மார்க்கத்தின் கட்டை அவிழ்த்து என் வாயிலாக வெளிப்படுத்திய இந்த அறிவை பெற்றுக் கொண்டு அதை ஏனைய மக்களுக்கு கற்பித்துக் கொள்ளவும் செய்வோர்களின் உதாரணமாகும் மேல் கூறிய முதலாவது விஷயம் அதாவது விளைகை தரும் பகுதி**.

மேல்க் கூறிய வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

**“எந்த ஊருக்கு எச்சரிக்கை செய்பவரை நாம் அனுப்பினாலும் எதைக் கொடுத்து அனுப்பப்பட்டுள்ளீர்களோ அதை நாங்கள் மறுப்பவர்கள் என்று அங்கே சொகுசாக வாழ்ந்தோர்கள் கூறாமல் இருந்ததில்லை”** (34: 35)

செல்வமுடையவர்களும் வாழ்க்கையில் சுக-ஆனந்தங்களை போதும் அளவவிற்கு அனுபவித்துக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தவர்களும் உண்மைக்கு எதிராக ஆணவத்துடன் நடந்துக் கொள்வதற்கும் உண்மையை மறுத்துக் கொள்வதற்கும் உற்சாகம் காட்டுவதுண்டு. தங்களின் முன்னோர்கள் பின் தொடர்ந்த வழியினை நாங்கள் கண்டோம். அவ்வாறே நாங்களும் அவர்களின் வழியினைப் பின்பற்றிக் கொள்வோம் என அவர்கள் கூறிக்கொள்கின்றனர். அவநம்பிக்கையாளர்களின் இச்சொல் உண்மையினை

கண்டுகொள்ளவோ நேர்வழியினை பெற்றுக்கொள்ளவோ வேண்டுமென்ற எண்ணத்தோடல்ல. அச்சொல் ஆணவத்திலிருந்து உருவாகிக் கொள்பவையாகும். அவர்கள் பின்பற்றிக் கொள்ளும் தவறான நம்பிக்கையை உயர்த்திக் காட்ட இந்த சொல்வாயிலாக அவர்கள் முயற்ச்சிக்கின்றனர்.

அதனால் இத்தகை நெறிகேடான வாதங்களை முன் வைத்துக் கொள்ளும் எதிராளிகளிடத்தில் அனைத்து இறைத்தூதர்களும் கேட்டார்கள்.

**“உங்கள் மூதாதையரை எதன் மீது நீங்கள் கண்டீர்களோ அதை விட மேலான நேர்வழியை நான் உங்களுக்கு கொண்டு வந்திருந்த போதிலுமா? என்று(தூதர்) கேட்டார். அதற்கு அவர்கள் நிச்சயமாக நாங்கள் எதைக் கொண்டு நீங்கள் அனுப்பப்பட்டிருக்கிறீர்களோ அதை நிராகரிக்கின்றோம் என்று சொன்னார்கள்”**

இதற்கு பொருள் அவர்கள் உண்மையினையும் நேர்வழியினையும் பின்பற்றிக் கொள்ள விரும்பவில்லை. மாறாக அவர்களை கட்டுகதைகளும் தவறான கர்ப்பனைகளும் கவரவைத்துக் கொண்டது என்றாகும்.

**“அதனால் நாம் அவர்களிடம் பகை தீர்த்தோம்….”** உண்மையின் மீது அவநம்பிக்கை கொள்ளவும் நெறிகேடான வாதங்களைக் கொண்டு அதை மறைத்துக் கொள்ளவும் முயற்ச்சித்ததற்கு கிடைத்த கூலி. பின்னர் உண்மையை மறுத்தோர்களின் முடிவு எவ்வாறு ஆகியது என பாருங்கள். **அதனால் முன்னோர்களுக்கு இறக்கப்பட்ட தண்டனைகளிலிருந்து மீட்சியை பெற விரும்புகின்றோர்கள் மறுப்பின் பாதையிலிருந்து விலகி நிற்கட்டும்.**

இக்குர்-ஆன் வசனம் நபி அரசர்(ஸல்) அவர்களுக்கு ஆறுதலாக இறக்கப்பட்டவையாகும். உண்மையினை மறுக்கும் தம் மக்களின் செயல்கள் யாவும் தூதர்(ஸல்) அவர்களின் இதயத்திற்கு வேதனையை விளைவித்தது. அந்த மக்களின் செயல்களையாவும் வரலாற்றின் துணையோடு குர்-ஆன் எடுத்துரைக்கின்றது. உண்மையை மறுப்போர்களின் அச்செயல்கள் வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால் அது அசாதாரணமான விஷயமல்ல என தூதருக்கு அது ஆறுதலளிக்கின்றது. முன்னோர்களுக்கு நிகழ்ந்த அவல நிலையினை நினைவூட்டுவதன் வாயிலாக கட்டுபடாமலிருப்பவர்களுக்கும் உண்மையை மறுத்துகொள்வோர்களுக்கும் அது முன்னெச்சரிக்கை விடுக்கின்றது. அது ஞாபகமூட்டுகின்றது. மூடத்தனமான பின்பற்றுதலும் மனநிலையற்ற பரம்பரைவாதங்களும் விளைவிக்கும் நாசத்தை குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு அது முஸ்லீம்களுக்கு ஞாபகமூட்டுகின்றது. இவ்வசனங்கள், அல்லாஹ்வையன்றி மற்றெவரையும் ஆராதனை மூர்த்தியாக எடுத்துக்கொள்ளாமலிருக்க இறை வேதம் விழிப்புணர்வு வழங்குகின்றது.

நான் மேல்கூறிய நபிமொழியில் அல்லாஹ்விடமிருந்துள்ள நேர்வழியை மழையுடன் உவமைப்படுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. மழையை பெற்றுக் கொள்ளும் பூமி மூன்று வகையாகயிருக்கின்றது. அதைப் போன்றே

அறிவுரைகளுக்கு செவி சாய்க்கும் மக்களையும் மூன்று வகையாக பிரித்துக் கொள்ளலாம். முதலாவதாக கூறப்பட்ட மண்ணும் பூமியும் மழையிலிருந்து பலன் அடைகின்றது. வறண்டிருக்கும் மண் பலனளிக்க வழிவகுக்கின்றது. அம்மண்ணில் செடி கொடிகளும் மரங்களும் சுறு சுறுப்பாக வளர்ந்து கொள்கின்றது. அது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பலன் கிடைக்கும் பகுதியாக சுயம் பரிணமிக்கின்றது. அதைப் போன்றே ஆகாயத்திலிருந்து இறைவனின் நேர்வழியும் ஞானமும் இறங்கும் பொழுது முதல் வகுப்பில் பட்ட மக்கள் அதை படித்துக் கொள்கின்றனர். நன்கு உணர்ந்துக் கொள்கின்றனர். இதயபூரணமாக அதை ஏற்றுக் கொண்டு அதை நடைமுறைப் படுத்திக் கொள்கின்றனர். தமக்கும் பொதுமக்களுக்கும் அது பயன்படுமாறுஅவர்கள் திகழ்கின்றனர்.

இரண்டாம் வகுப்பில் உட்படுகின்ற நபர்களின் விஷயம் மற்றொன்றாகும். அவர்கள் விஷயங்களை உணர்கின்றனர். ஆனால் அதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு தேவையான புத்தியினையோ தன்னம்பிக்கையையோ அவர்கள் பயன்படுத்துவதில்லை. சுருக்கமாக கூறினார் உணர்ந்த விஷயங்களை அவர்கள் செயல்முறையில் கொண்டு வருவதில்லை.

ஞானத்திற்காக ஆவேசம் காட்டும் ஒரு மாணவன் ஞானத்தை அவர் சுயம் பயன்படுத்திக் கொள்வதோடு ஏனையவர்களுக்கு தேவையான ஞானமும் அவரிடமிருந்து கிடைத்துக் கொள்கின்றது. இத்தகையான ஆட்கள் பெற்றுக் கொள்ளும் ஞானம் மற்று மக்களுக்கும் பயன்படுமாறிருக்கின்றது.

மூன்றாவது வகுப்பில் பட்ட மண் பலனற்றதாகும். அதிலிருந்து ஏதும் முளைத்துக் கொள்வதில்லை. தண்ணீரைக் கொண்டு அம்மண்ணுக்கு எந்த பயனுமில்லை என்று மட்டுமின்றி தண்ணீரை தம்பால் தக்க வைத்துக் கொண்டு மற்று மக்களுக்கு பயன்படுமாறு பரிணமித்து கொள்ள அப்பகுதிக்கு முடியாமலிருக்கின்றது.

இவ்வாறு மூன்றாவது வகுப்பில் படுகின்ற ஆள்களுக்கு இதயமோ ஞானத்தை தக்க வைத்துக் கொள்வதற்கான ஆற்றலோ இருப்பதில்லை. ஞானம் கிடைத்தால் அதிலிருந்து பலன் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் அல்லது மற்று மக்களுக்கு பயன் கிடைக்கும் எதுவும் கற்பிக்காதவர்கள். **முற்றிலும் நன்கு அறிந்தவன் அல்லாஹ் மட்டுமாவான்.**

**அல்லாஹ்வின் கயற்றினை வலுவாக பற்றி பிடித்துக் கொள்ளுங்கள் என்ற விஷயத்தில் அல்லாஹ் எனக்கு வழங்கிய குர்-ஆனின் கட்டளைகளின் உண்மையான விளக்கங்களைக் குறித்து அல்லாஹ் என்னை கற்பித்த விஷயங்களையே நான் மேல் கூறியிருப்பது. எவர் ஒருவரின் அருட்களால் எல்லா நல்ல விஷயங்களையும் பூர்த்தி செய்ய முடிகின்றதோ அந்த எல்லாம் வல்லவனுக்கு மட்டுமே அனைத்து பகழும். அனைத்து புகழுக்கும் உரியவன் அவன் மட்டுமே. முஹம்மது நபி(ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின்**

குடும்பத்தாரின் மீதும் அன்னாரின் தோழர்கள் மீதும் அல்லாஹ் அமைதியினையும் அருட் கொடைகளையும் பொழிவானாக! ஆமீன்.



**TAMIL TRANSLATOR AZIM AHMAD**

**WITH HAZRAT KHALIFATHULLAH (AS)**

# GOLDEN WORDS

## பொன் மொழி



"இதயத்தின் நிலைக்கேற்றவாறே மற்று உறுப்புகளின் சீரமைப்பு. இதயத்தில் தூய்மையும் நன்மையும் நிறைந்திருந்தால் அனைத்து உறுப்புகளும் பரிசுத்தமாகயிருக்கும். இதயத்தில் தீமையும் அசுத்தவும் குவிந்திருந்தால் மற்ற உறுப்புகளும் அசுத்தமாகயிருக்கும். இதயத்தின் சீரமைப்பே, மற்று உறுப்புகளின் சீரமைப்பிற்கு காரணமாகயிருக்கின்றனது."

**HAZRAT MUNIR AHMAD AZIM (AS)**

(Friday Sermon-The Heart- A Study Part-5)

Coming Soon

# The Real Face of the Hypocrites

**(Tamil)**

**The Author:**

**HAZRAT MUNIR AHMAD AZIM (AS)**

Tamil Translation : Azim Ahmad